**தலைப்பு 180 – சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

---

| தலைப்பு | திணைக்களப் பெயர் |
|---|---|
| 289 | விவசாய ஏற்றுமதித் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

மேற்கூறப்பட்ட 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சினதும் அந்த அமைச்சின் கீழ் வரும் திணைக்களத்தினதும் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை கீழே குறிப்பிடப்படும் திகதிகளில் அமைச்சின் செயலாளருக்கும் திணைக்களத்தின் தலைவருக்கும் வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களப் பெயர் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 180 | சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு | 2015.07.30 |
| 289 | விவசாய ஏற்றுமதித் திணைக்களம் | 2015.06.24 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 1,035.34 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 929.03 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 25.42 மில்லியன் மற்றும் ரூபா 80.89 மில்லியன் அதாவது தேறிய ஏற்பாட்டில் 10.28 சதவீதம் மற்றும் 10.26 சதவீதம் ஆகக் காணப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 180 | 247.05 | 221.63 | 25.42 | 10.28 |
| 289 | 788.29 | 707.40 | 80.89 | 10.26 |
| மொத்தம் | **1035.34** | **929.03** | **106.31** | 10.27 |

**(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

வேறுபட்ட செயற்பாடுகளுக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அமைச்சிற்கு ரூபா 111.56 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 72.08 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 39.48 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்கான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 18001 | 30.0 | 23.9 | 20.0 | 23.1 | 120.0 | 83.1 |
| 28901 | 3.5 | 4.0 | 1.0 | 3.1 | 12.0 | 7.3 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2.78 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு | 6000/0000/00/0015/0189/000 | 3,700 |
| விவசாய ஏற்றுமதித் திணைக்களம் | 6000/0000/00/0015/0144/000 | 2,779,741 |
| மொத்தம் | | **2,783,441** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள விவசாய ஏற்றுமதித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 முதல் 4 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. தலைப்பு 180 – சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு

## 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | கிடைக்கின்ற காசோலைகள், காசுக்கட்டளை போன்றவைகளுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 | முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை |
| (இ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | வாகனம் பட்டியல்ப்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை |
| (உ) | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐ/ஏ/ஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஊ) | கேள்வி கோரல் பதிவேடு | கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி | முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை |
| (எ) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை |

**3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

அமைச்சிற்கு மீளாய்வாண்டின்போது சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன் அந்த கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 24,070,846 ஆகும்.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 200,000 தொகையான மொத்தத் தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 16 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 21 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டிற்காக தேவையான கட்டுநிதி விண்ணப்பம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 180-2-3-1-2201 ஆம் செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 50 மில்லியன் நிதியேற்பாட்டில் ரூபா 39.5 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 10.5 மில்லியன் நிதியேற்பாட்டை பயன்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

18001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 119,700 தொகையான இடர் கடன் மீதிக்காக பிணையாளராக அரசாங்க சேவையில் இல்லாத உத்தியோகத்தர் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தார்.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் ஊவா மாகாண சபையில் இருந்து இடமாற்றலாகி வந்த உத்தியோகத்தரொருவரின் கடன் மீதி கையேற்கப்படாமல் தவணையாக உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டு மாகாண சபைக்கு அனுப்ப வைக்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 83,050 தொகையான கடன் மீதி அறவிடப்பட்டமைக்கோ அல்லது தீர்க்கப்பட்டமைக்கோ சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அது அங்கத்தவர்கடன் பதிவேட்டிலிருந்தும் நீக்கப்பட்டிருந்தது.

**3.5 கட்டுநிதிக் கணக்குகள்**

நிதிப்பிரமாணம் 371 இற்கு முரணாக 03 சந்தர்ப்பங்களின் போது மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,000 எல்லையினை விஞ்சி ரூபா 69,716 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உபகட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

**3.6 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத ஒரு வருடத்திற்கு குறைவான பொறுப்புக்கள் ரூபா 1,838,715 ஆக இருந்தது.

**3.8 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | | |
| XXIV ஆம் அத்தியாயத்தின் 3.5 மற்றும் 3.17.2 ஆம் பிரிவுகள் | - | திரட்டிய சம்பளத்தில் 40 சதவீதத்திற்குரிய கழிக்கப்படக்கூடிய எல்லையை விஞ்சி உத்தியோகத்தரொருவருக்கு இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே மேலுமொரு உத்தியோகத்தரொருவர் பிணையாளரொருவராகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தார். |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

---------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 104(3)(4) | 130,544 | 2014 திசெம்பர் 30 ஆந் திகதி வாகனமொன்றின் முன் கண்ணாடி உடைந்தமையினால் ஏற்பட்ட நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணப் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| | | 356,665 | 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதி அமைச்சின் வளவில் இரண்டு வாகனங்கள் ஒன்றுக்கொன்று மோதுண்டமையால் ஏற்பட்ட விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) | நிதிப்பிரமாணம் 1642 | 487,209 | மீளாய்வாண்டின் போது மூன்று வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக பொலிசிற்கு அறிவித்திருக்க வில்லை. |

**3.9 செயலாற்றல்**

--------------------

**பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்**

---------------------------------------------------------------------------

அமைச்சின் நோக்கங்களுக்குரிய செயற்பாடுகளுக்குப் புறம்பாக செயற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2014 நவம்பர் 21 ஆந் திகதி அலரி மாளிகையில் நடைபெற்ற தேசிய விவசாயிகள் மாநாட்டின் கூட்டத்தில் பங்குபற்றிய 3,600 அங்கத்தவர்களுக்கு பகல் உணவு வழங்குவதற்காக ரூபா 904,781 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) சனாதிபதி பதவியேற்பிற்காக 2014 நவம்பர் 14 ஆந் திகதி தினமின செய்திப்பத்திரிகையில் முழுப்பக்கமொன்றில் அறிவித்தலொன்றைப் பிரசுரிப்பதற்காக ரூபா 196,560 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------------------

2014 இன் செயல்முன்னேற்ற அறிக்கை மற்றும் 2015 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளடக்கப்பட்ட 100 புத்தகங்கள் தனியார் நிறுவனமொன்றிலிருந்து அச்சிட்டு அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 632,884 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.11 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

-----------------------------------------------------------------------------

அமைச்சிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காணபிக்கப்பட்ட பற்றாக்குறைகள் தொடர்பாக அமைச்சினால் தீர்வு காணப்படாத பந்திகளுக்குரிய தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2011 | 09 | வாசனைப் பொருட்கள் மற்றும் அண்மித்த பொருள் உற்பத்தி சபையின் நிர்வாகம் மற்றும் பாதுகாத்தல் அமைச்சின் பிரதான பணியொன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபை கலைக்கப்பட்டு கலைத்தல் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.12 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 10 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 51 | 33 | 18 |
| (iv) | ஆரம்ப நிலை | 27 | 24 | 03 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 02 | - | 02 |
| | **மொத்தம்** | **95** | **68** | **27** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 27 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) அரசாங்க சேவையில் இருக்கக்கூடிய ஆகக்கூடிய வயது எல்லை 60 ஆக இருந்த போதிலும் அந்த எல்லையினை விஞ்சிய ஒருவருக்கு அமைச்சரின் பதவியணியில் சாரதியாக சேர்க்கப்பட்டு 2010 நவம்பர் 23 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் வரையான காலத்தில் சம்பளம் மற்றும் படியாக ரூபா 1,052,764 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அந்த சாரதிக்காக அரசாங்க ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பாக ரூபா 33,254 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அவர் 60 வயதை விஞ்சியிருந்தமையினால் அந்தப் பணம் மீள அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அது மீண்டும் அந்தச் சாரதிக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் படி அமைச்சு மற்றும் பிரதி அமைச்சரின் சாரதி பதவி முதல் பிரத்தியோக உதவியாளர் பதவி வரை ஊழியர்களைச் சேர்க்கும் போது அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சரினதும் பிரதி அமைச்சரினதும் பதவியணிக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த 22 பேர்களின் தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. தலைப்பு 289 – விவசாய ஏற்றுமதித் திணைக்களம்

### 4.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

04 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 23 சதவீதம் முதல் 79 சதவீதம் வரையிலான அளவில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 4.2 பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களை விஞ்சிய ரூபா 567,791 கூட்டுத்தொகையான 05 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

விடய இலக்கம் 28901 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் படி 05 ஊழியர்களிடமிருந்து அறவீடுகள் நிலுவையாக இருந்த 03 வருடங்கள் முதல் 13 வருடங்கள் காலப்பகுதியைக் கடந்திருந்த ரூபா 671,553 கூட்டுத்தொகையான நிலுவைக்கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு**

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் படி ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின்போது ஒரு தடவை மாத்திரம் கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது.

**4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ள சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள பிரகாரம் சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டால் அவ்வாறு காணப்படுகின்ற காலம் |
|---|---|---|---|
| (i) | காணியும் கட்டிடமும் | 01 | 34 வருடங்களுக்கு முன் |
| | -மேற்படி- | 01 | காலம் சமர்ப்பிக்கப்படவில்லை |
| (ii) | மோட்டார் வாகனம் | 05 | 01 வருடம் முதல் 10 வருடங்கள் வரை |

**4.6 வெளிநாட்டுதவி செயற்திட்டம்**

**செயற்திட்டத்தின் சொத்துக்கள் விளைவற்றுக் காணப்படுகின்றமை**

2009 ஆம் ஆண்டில் கொரியா அரசாங்கத்தின் (KOICA) நட்புறவுச் சங்கம் மூலம் வழங்கப்பட்ட உதவிகளைப் பயன்படுத்தி 2009 நவம்பர் 16 ஆந் திகதியளவில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு, விவசாய உற்பத்தி பொதியிடல் செயற்திட்டத்திற்குத் தேவையான இயந்திர உபகரணங்கள் வழங்கி பொருத்தப்பட்டிருந்த போதிலும், 2015 யூலை 08 ஆந் திகதி வரையிலும் அந்த செயற்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.7 நட்டங்களும் இழப்புக்களும்**

2012 ஆம் ஆண்டின் போது களவாடப்பட்ட ரூபா 2,400,000 பெறுமதியான வாகனம் தொடர்பான நிதிப்பிரமாணத்தின் படி மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் 2015 யூலை 08 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.8 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 85 | 51 | 34 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 28 | 09 | 19 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 800 | 604 | 196 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 353 | 424 | - | 71 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 97 | 09 | 88 | - |
| | **மொத்தம்** | **1,363** | **1,097** | **337** | **71** |